# Rediffusion/Edelman

Coverage Report: TCS IT Wiz – National Finals – Pondicherry

**Publication:** Dina Vanigam
**Date:** 20/12/2015
**Edition:** Pondicherry
**Page No:** 5
**Headline:** St. Patrick Matric, Pondicherry finish as Runners Up at the National Finals of TCS IT Wiz 2015

## டிசிஎஸ் ஐடி விஸ்
## தேசிய விநாடி வினா போட்டி அறிவிப்பு



**புதுச்சேரி, டிச.19**

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்திய பள்ளிகளுக்கான விநாடிவினா நிகழ்ச்சியான டிசிஎஸ் ஐடி விஸ் இறுதிச்சுற்றில் பட்டத்திற்காக இளம் ஐடி ஆர்வலர்கள் அடங்கிய 15 குழுக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றன.

மும்பையின் விவண்டா பை தாஜ்-ல் டிசம்பர் 12 ம் தேதி இறுதிச்சுற்று நடைபெற்றது. இந்த ஆண்டு டிசிஎஸ் ஐடி விஸ் விநாடி வினா பிராந்திய சுற்றுகள் அகமதாபாத், பெங்களூரு, சென்னை, கோவை, தில்லி, கொச்சி, இந்தூர், கொல்கத்தா, மும்பை, நாக்பூர், புனே உள்ளிட்ட 15 நகரங்களில் நடைபெற்றது.

இந்தியா முழுவதும் உள்ள 1806 பள்ளிகளைச் சேர்ந்த 17,000 க்கும் மேற்பட்ட 8 முதல் 12 ம் வகுப்பு மாணவர்கள் பங்கேற்றனர்.

நடைபெற்ற ஐந்து சுற்றுகளுக்கு பிறகு ஜேம்-சட்பூரின் ராஜேந்திர விதியாலயாவின் தான் கலாம் மற்றும் ஆந்தன் அஸ்மித் பட்டத்தை வென்றனர். அவர்களுக்கு பரிசாக தங்கப்பதக்கம், ஐபோன் 6 எஸ் ,ஆப்பிள் வாட்ச்,பவர் பேங்க், ஹார்டு டிஸ்க் உள்ளிட்டவை வழங்கப்பட்டன. இதில் புதுச்சேரியின் புனித பேட்ரிக் பள்ளியை சேர்ந்த ஜெயகிரிஷ்ணா மற்றும் வெங்கட சாய் ஆதர்ஷ் பிராந்திய அளவில் வெற்றி பெற்று இறுதிச்சுற்றில் நூலிழையில் வெற்றியை தவற விட்டு இரண்டாவதாக வந்தனர். இவர்களுக்கு வெள்ளிப்பதக்கம்,ஐபோன் 6 எஸ்,பவர் பேங்க் சரஜர்,ஹார்டு டிஸ்க் உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

இறுதிச்சுற்றில் பங்கேற்ற 30 மாணவர்களும் டிசிஎஸ் சி.இ.ஓ மற்றும் நிர்வாக இயக்குனர் என்.சந்திரசேகரனை சந்தித்திப்பேசினர்.